# இடைப்பாடி நகராட்சி
# குடிநீர் திட்ட உப விதிகள்

இடைப்பாடி நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு எண்கள் 130,131,132 (2)134,135,306(3) (சி)(இ)(எப்) (ஜி) (எச்) (ஐ) 306(7) மற்றும் 308 ஆகிய விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்

இடைப்பாடி நகராட்சியில் புதியதாக வீட்டுக்குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இணைப்புகளும் அடங்கும். இந்த விதிகளின்கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் அளவைக் கணக்கிடவும் குடிநீர் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர்க்குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் மற்றும் புதிய குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவைகள் இந்தத் துணைவிதிகளில் இடம் பெறுகின்றன.

1) குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் துணை விதிகள் சட்டம் 131 உபவிதி (1) மற்றும் விதி 132 ன்படியும் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படியும் ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து முலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) இல் கண்டுள்ள கட்டண விகிதங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ100/– (ரூபாய் நூறு மட்டும் ) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக்கட்டணம் செலுத்த பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத்தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி ஆணை பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.

அ) குடிநீர் இணைப்பிற்காக விநியோகம் செய்யும் குழாய் தளவாடங்களின் விலையும் சேர்த்து மொத்த மதிப்பீட்டு கட்டணத்தில் 20 சதவீதம் கண்காணிப்பு கட்டணம் (Centage) மற்றும் ஆய்வுக் கட்டணம் ரூ400/– வசூலிக்கப்படும்.

ஆ) குடிநீர்த் திட்டத்தில் அரசுக் கட்டிடங்களுக்கு வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு ஆணை பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் வேறு இனங்களுக்கு வரவு வைக்கப்படமாட்டாது. அத்துடன் செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

ஈ) குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்தச் செலவில் நகராட்சி பகிர்மானக்குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

2) குடியிருப்பு பயன்பாட்டிற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் குழாய் அளவு விகிதத்தில் (Tap rate) உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்புத் துண்டிக்கப்படும்.

3) வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரணங்களுக்கானதா அல்லது குடும்பக் காரியங்கள் அல்லாத என்பதை பற்றி 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 306வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரையின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

4) அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடியிருப்பு பயன்பாட்டிற்கும் அவையல்லாத பிற பயன்பாட்டிற்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடியிருப்புக்கு அல்லது பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும். சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டிய இனங்களுக்கு மன்ற அனுமதியுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமையான நிறுவனங்களுக்குத் கொடுக்கப்படும் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள பயன்படுத்தும் குடிநீருக்கான பயன்பாட்டை பொறுத்து குடியிருப்பு அல்லது அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி இல்லாத விடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டும் போதும், கூடுதல் கட்டிடம் கட்டும் போதும், பெரிய பழுதுகள் பார்க்கும்போதும், நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டலோ அல்லது பன்படுத்துவதாக ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத பயன்பாடாக கருதப்பட்டு வணிகக் காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஈ) தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறுகளுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

5) ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர்க்குழாய் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பைக் கட்டுப்படுத்த திருகு குழாய் நீர்வரத்து கட்டுப்பாட்டுமாணி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் பயன் இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்படமாட்டாது.

விளக்கம் – இத்துணை விதிகளில் இடம் பெறும் குடியிருப்பு (வீடு ) என்பது ஒரு பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைய சொத்துவரிக்காக ஒரே பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் குறிக்கும்.

அடுக்குமாடி குடியிருப்புகளுக்காக இணைப்பு வழங்கப்படும் பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்புகள் கீழ்கண்டவாறு வழங்கப்படும்.

நான்கு குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 1 எண்ணம், 15 மி.மீ

5 முதல் 8 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 2 எண்ணம், 15 மி.மீ

9 முதல் 12 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 3 எண்ணம், 15 மி.மீ

13 முதல் 16 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 4 எண்ணம், 15 மி.மீ

17 முதல் 20 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 5 எண்ணம், 15 மி.மீ

21 முதல் 40 குடியிருப்பு வரை 40 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 6 எண்ணம், 15 மி.மீ

41முதல் 70 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 7 எண்ணம், 15 மி.மீ

70 குடியிருப்புகளுக்கு மேல் 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 8 எண்ணம், 15 மி.மீ

6) கோவில்கள் , மசூதிகள், மாதாகோவில்கள் ஆகியவற்றிக்குத் கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் வணிக நோக்கத்திற்கு வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூல் செய்யப்படும்.

7) இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர்க் குழாய்களில் உள்ள நீர்விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் அளவு அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும் குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அனுமதி பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்குத் தக்கவாறு கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1) 15மி.மீ குழாய் இணைப்பு 10 மி.மீ. திருகு குறுங்குழாய் ( 30 மீட்டர் நீளம் வரை)
2) 20மி.மீ குழாய் இணைப்பு 15 மி.மீ. திருகு குறுங்குழாய் ( 90 மீட்டர் நீளம் வரை)

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்து தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும் எல்லா இணைப்புகளும் திருகு குறுங்குழாய் (Flow control Valve) மற்றும் இதர துணைப்பாகங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15 மி.மீ. க்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக்குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**8) உயர்த்தப்பட்டுள்ள குடிநீர் கட்டணம்**

அ) வீட்டுப்பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு பிரதிமாதம் =ரூ130/–
ஆ)வணிகப்பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு பிரதிமாதம் =ரூ225/–
இ)தொழிற்சாலைப்பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு பிரதிமாதம் =ரூ305/–

**ஈ) உயர்த்தப்பட்டுள்ள குடிநீர் கட்டண வைப்புதொகை**

(i)வீட்டு பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு =ரூ5000/–
(ii) வீட்டுப்பயன்பாடின்றி வணிக நோக்கு மற்றும்
தொழிற்சாலைநோக்கு இணைப்பு ஒன்று =10000/–

**உ)** குடியிருப்புகளுக்கான புதிய குடிநீர் கட்டண வைப்புத்தொகை ரூ5000/–ஐ நான்கு சம தவணைகளில் செலுத்தலாம். அதாவது விண்ணப்பம் அளிக்கும்போது ஒரு தவணையும் மீதமுள்ள தொகையை மூன்று தவணைகளில் ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டும்.

**ஊ)** குடியிருப்புக்கான சாலை பராமரிப்பு கட்டணம் , மேற்பார்வை கட்டணம் ஆகியவற்றுக்கான தொகையையும் நான்கு தவணையாக பிரித்து, முதல் தவணையை விண்ணப்பத்துடனும், மீதமுள்ள 3 – தவணைக்கான தொகைகளை ஒரு வருட காலத்திற்குள் செலுத்த வேண்டும்

**ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கும் கூடுதல் வைப்புத்தொகையை ஆறு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.**

மொத்தமாக குடிநீர் விநியோகிக்க (Bulk Supply of Water) கோரப்படும் இனங்களில் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் விலை விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

9) அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளைச் சேர்ந்த குழாய்கள் இணைப்புகள், யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அனுமதி பெற்றவர்களால் எளிதாக பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளைப் பார்வையிட வசதி செய்துதர வேண்டும். அவ்வாறு பார்வையிடத் தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாத காரணத்திதால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிதறும் தண்ணீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர்க் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

10) அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும் அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கிப்பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ2/– வசூலிக்கப்படும்.

இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்தச்செலவில் உரிய அனுமதி பெற்று அளவு மானிகளைப் பழுதுபார்த்தல் பணியை மாநகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்திரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்பந்தப்பட்ட அலகு அலுவலகத்தில் பொறுப்பு பொறியரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின் மட்டுமே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

11) அளவுமானி பழுதாகும் சமயங்களல் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது ஆணை விதியில் வரையறுத்துள்ள விகிதங்களின்படி குடிநீர்க்கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

12) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை தலைமைப்பொறியாளர் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

13) அ) அளவுமானி முறையிலான கட்டணத்தைக் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு காலாண்டுக்கும் 10ம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய காலாண்டுக்கு பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

ஆ)மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது காலக்கெடுவிற்குள் குடிநீர்க் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்டதிட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்செலுத்ததாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணம் ரூ200/– ம் மறு இணைப்பு கட்டணம் ரூ200/– ஆக மொத்தம் ரூ400/– வசூல் செய்யப்படும். இத்தொகை குடிநீர் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தி மறு இணைப்பை பெற்றுக்கொள்ளத் தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

14) குடிநீர் பயன்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாக தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்புக் கட்டணம் ரூ200/– மறு இணைப்புக் கட்டணம் ரூ200/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

**குறிப்பு:** இந்தத்துணை விதிகளில் வரும் காலாண்டு என்பதை மூன்று முழுத் திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

15) அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ250/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்து மூலம்அறிவிப்பு செய்து கொள்ள வேண்டும்.

ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத்தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்கு பின் தெரியவந்தால் வைப்புத்தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

16) குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு சார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளில் ஆணையர் மிகப்பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின் அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்த ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17) வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றுக் குழாய்களைப் பெருத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்படும்.

18) குடிநீர்க் குழாய்களைத் தொட்டி அல்லது சேமிப்புத் தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24 க்கு பொருந்தாது.

19) ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர்க் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டும். பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று நராட்சி பணியாளர்கள் முன்னிலையில் பழுது பார்க்க வேண்டும். மேலும், அதற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

20) குடிநீர் குழாயில் உள்ள நிலையை பரிசோதனை செய்யும் பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும் போது அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புக்களோ பழுதுபட்டு இருந்தால் இதைப் பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ ஆணையரால் குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும் இணைப்புகளைச் சரி செய்யவில்லை என்று தெரியவரமேயானாலும் பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்புத் துண்டிப்பு செய்து விட்டு இணைப்பிற்கு குடிநீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

21) குடும்பப் பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக்குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லது பிற காரணங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பில்உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்பப் பயன்களுக்கான குடிநீரை இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்பப் பயன்களுக்கான குடிநீரை அவையில்லாத பிறவற்றிற்குப் பயன்படுத்துவதாக ஆணையர் அறியவரின் அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணங்கள் இருந்தாலும் அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12 ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்பப் பயன்களுக்கு அல்லாத விகிதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை

தன்னிடமுள்ள ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக்கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையார், குடியிருப்போர் செலுத்தத்தவறினால் அந்த வீட்டினைப்பை துண்டித்துவிட ஆணையர் ஆணை பிறப்பிக்கலாம்.

22) அ) நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாயை அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படக்கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். பொருட்கள் யாதும் திருப்பி தரப்பட மாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்று உறுதி மொழியுடன் ரூ7000/– அபராதத் தொகை பெற்றுக்கொண்ட பின்பு தான் இணைப்பு வழங்கப்படும். மேலும் , மேற்படி குடிநீர் இணைப்புக்குரிய குடிநீர் கட்டணத்தின் 3 வருடத் (ஆறு அரையாண்டுகள்) தீர்வையினைக் கூடுதல் தண்டத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

ஆ) இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின் இயங்கி மற்றும் ஏனைய கருவிகளை வைத்து குடிநீர் உறிஞ்சுவது கண்டுபிடிக்கப்பட்டால் நிரந்தரமாக குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். மேலும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

23) குடிநீர் இணைப்பு வேண்டி மனு செய்யும் அனைத்து மனுதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருப்பதுடன் வெளிச் செல்லும் கழிவு நீரை வெளியேற்ற புதை வடிகால் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கும் நிலையில் நகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதை வடிகால் இணைப்புக்கும் மனு செய்ய வேண்டும். மேலும் மனு செய்யும் பகுதியில் புதை வடிகால் திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரைத் தனியாக தொட்டி (Cess pool) ஆகியவற்றை நகராட்சி ஆணையர் திருப்தியடையும் நிலையில் அமைக்க வேண்டு. பொதுக்கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக் கொடுக்க வேண்டுமானால், தனியாக தொட்டி ஒன்றை அதற்குரிய இணைப்புக் கொடுக்க வேண்டுமானால், தனியாகத் தொட்டி ஒன்றை அதற்குரிய துணைக்கருவிகளுடன் பொருத்தி நகராட்சிப் பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்படவேண்டும்.

24) கொதி கலன்களுக்கு நகராட்சியில் பகிர்மானக் குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்கான தனியான தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

25) தீ விபத்து நேரிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நகராட்சி ஆணையர் / பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாமல் பிரதானக்குழாய் அல்லது பகிர்மானக்குழாய் திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் ஆகியவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

26) ஆணையர் அவர்கள் ஆணையின் பேரில் திருமணம் மற்றும் இதர நேர்வுகளில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்பு வழங்கப்படும். இநத் இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ100/– பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ250/–ம் அதை

திரும்பத் துண்டிக்கும் போது ரூ250/—ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15 எம்.எம். அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 2 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு இணைப்பு கேட்டவர்களுக்கு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும். கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்தற்கு தேவையான பொருள்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், சொந்தசெலவிலும் செய்து கொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ50/— வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

27) அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியின் மீது பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதன் மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவைப் பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ கூடாது.

ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானிக் கருவி பதிவு செய்வதற்கு முன்னாள் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தவிர்கக அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையோ அனுமதிக்கப்பட மாட்டாது. அல்லது அதற்குக் காரணமாக இருத்தல் கூடாது.

28) அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் கொடுக்கப்பட்ட எல்லா குடிநிர் இணைப்புகளுக்கும் பொருந்தும். குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் பொருந்தும். அவ்வாறு உள்ள குடிநீர் இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்குச் செலுத்தப்பட வேண்டிய எல்லாக் கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் அவ்விணைப்புகள் அதிகாரப்பூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகளை நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாக கருதி குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

இ) புதியதாக குடிநீர் இணைப்புப்பெற விரும்புகின்றவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதி ஆண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

29) குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர்ப்பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் குடும்ப பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தவறுதலாகப் பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகின்றது என்று தெரிய வந்தாலோ 24 மணி நேர கால எச்சரிக்கை அறிவிப்புக் கொடுத்து இணைப்பைத் துண்டிக்கும் உரிமை மாநகராட்சி ஆணையருக்கு உண்டு. இத்தகைய நேர்வுகளில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நஷ்டத்திற்கும் நகராட்சி மன்றமோ அல்லது ஆணையரோ பொறுப்பு அல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது.

30) ஒவ்வொரு இணைப்பின் தகுதியையொட்டி தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

31) மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர்.

அ) ரூ500 வரை அபராதமும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால் தொடர் அவராதமாக நாள் ஒன்றுக்கு ரூ25/– வீதம் விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானல் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32) குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை (படிவம் – அ) நகராட்சி தகவல் மையத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**தண்டனை:**

இந்த துணை விதிகளில் எந்த ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும் மேலும், ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும், அவர் தண்டனைக்கு உரியவர் எனறு கருதப்படுவர். அவருக்கு ரூ1000/– வரையிலும் தண்டமாக வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணைவிதிகளைத் தொடர்ந்து மீறப்படுமானால் நாள் ஒன்றுக்கு ரூ100/– தொடர் தண்டல் விதிக்கப்படும்.

**பொதுக்குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்**

1) எவரும் பொதுக்குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படி விடக்கூடாது.

2) அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

இ) பொதுக் குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ அல்லது துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ பிராணிகளைக் குளிப்பாட்டுவதோ கூடாது.

ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொதுக்குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

3) விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பதற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காகப் பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

4) தீ விபத்தின்போது தீயினை அனைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொதுக் குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக்கூடாது. இவ்வாறு தீயணைப்புக்காக அன்றி பிற பயன்களுக்காக பொதுக் குடிநீர்க் குழாய் அல்லது தீயணைப்புக் குழாயில் இருந்து தன்னல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாகக் கருதப்படுவதுடன் நகராட்சியின் சட்ட விதிகளின்படியும் அவர்மீது நிதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

5) அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள மிருகங்களை அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்குத் தெரிந்திருக்கக்கூடிய, மிருகங்களை பொது குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புத் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

6) பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் ஆகியவற்றைக் சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

7) தீ விபத்து நேரும்போது அன்றி ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மானக்குழாயில் உள்ள தீயணைப்புக்குழாய் அல்லது நகராட்சி குடிநீர் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக்குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

8) பொதுக்குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக கிடைத்த குடங்கள் டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் வைக்கவோ கூடாது. பொதுக்குடிநீர் குழாயில் குடங்களைக் கழுவி குடிநீரை வீணாகக்க்கூடாது.

9) எந்த ஒரு மனிதனும் பொது குழாய் அல்லது தீயணைப்பு அல்லது தீயணைப்பு குழாய் அமைந்துள்ள பகுதியில் தொந்தரவு ஏற்படும் விதமான நடந்து கொள்ளக்கூடாது. அவ்வாறு மீறுபவர்கள் நகராட்சி விதிகளின்படி தண்டணைக்குள்ளவார்கள்.

ஆணையாளர்(பொ),
இடைப்பாடி நகராட்சி

# Idappadi Municipality
# Water Supply Bye-laws

Bye-laws framed under Section 130,131,132,(2),134,135,306(C) (E) (F) (G) (H) (I) 306(7) and 308 of the Tamil Nadu District Municipalities Act 1920 for Provision of drinking water supply Connections to the house and other buildings located within the limits of the Idappadi Municipality.

These bye-laws contain grant of water supply connection, subsequent changes in the said connections, attending repairs and maintenance, etc. Provisions are also made in the bye-laws for prevention of wastage of drinking water assessment of the accurate quantity of water consumed through each connection, fixing of meters, Construction of storage pits and provision for the fire hydrant purposes and collection of water charges and deposits.

1. Under section 131(1) and 132 of the Tamil Nadu District Municipalities Act and the Rules made there under as amended, every owner of the house its occupier with the consent letter of the owner is mandated to send an application in form A for getting house connection accompanied by an estimate for the provision of water connection. Such owner or occupier should also remit a registration fee of Rs.100 and send the application along with the particulars of remittance, to the Commissioner of the Municipality. The application will be duly entered according to the date of receipt of the same and the house connection will be given according to seniority. Such applicant should also remit such amount of deposit and estimate amounts as fixed by the Municipality. The Registration fee will not be refunded on any amount

A. 20% on the overall estimate amounts for the provision of drinking water connection will be collected as cent age inspection charges and material cost A minimum amount of Rs. 400 will be collected towards inspection charges.

B. For drinking water supply Connection in respect of Government Building, it is not necessary to remit the deposit and other amounts in advance. They shall be remitted after the issue of permission for the connection.

C. Deposit amount and other charges collected will not be refunded. The deposits also will not carry any interest.

D. The house connection work should be undertaken by the House owner himself by employing qualified plumber at their own cost, and such work should be done up to distribution main.

2. In the case of new water supply Connections for residential or non- residential purposes, meters will be fixed and as per the meter reading showing the quantity of water consumed, charges will be collected. For the existing water supply Connections where no meter is fixed and charges are collected on tap rate basis, a notice will be issued informing the consumer to get meter fixed up within 60days and the water supply connection will be charged under meter category Non-compliance will lead to disconnection of water supply without any further notice.

3. Whether a connection is for domestic or non-domestic purposes will be decided in each case as per explanation given under Section 306 of the Tamil Nadu Districts Municipalities Act, 1920.

4. i) If through a single connection water is drawn for domestic as well as non-domestic purposes, the charges pertaining to non-domestic purposes will be collected.

For buildings a single exempted from Property Tax, water supply connection will be given if permitted by the Municipal Council

ii) Even in the case of buildings owned by the Municipality, such water supply connections will have only meter reading devices but also appropriate rates of charges will be collected depending upon the domestic or non-domestic use of water by such establishments.

iii) Houses for which property tax are not levied will not given , water supply connection. In cases where the houses were already having , water supply connection, and the present structure is demolished and fresh constructions and carried out (or) when additional constructions are undertaken to the existing structure (or) when major repairs are being carried out and if the Municipality water was used or presumed by the Commissioner that it was used for such constructions it will be construed that the water has been used for non-domestic purposes and the rates applicable the Commercial purpose will be levied and collected.

iv) The Municipal Council may Supply water to any or other private person outside the local its jurisdiction, with the consent and approval of the Chief Engineer, Office of Commissioner of Municipal Administration, following the conditions, prescribed by him.

5. Each residential building will be given only one water supply connection. To control the flow water ferrules Flow Control Valve and such other closure devices will be fitted. Water will not be supplied from any other nearby residential water connections or from the proposed “User Connections”.

**<u>Explanation:</u>**

The word ‘Residential’ (house) mentioned in these bye-laws means a portion of a building or buildings treated as a single unit for the purpose of levying property tax.

For multi storied apartment building connection given shall be proper size depending upon the no.of dwellings as follows

| | |
|---|---|
| For 4 flats 20mm pipe, 15mm Ferrule | 1 No. |
| For 5 to 8 flats 20mm pipe, 15mm Ferrule | 2 No. |
| For 9 to 12 flats 20mm pipe, 15mm Ferrule | 3 No. |

For 13 to 16 flats 20mm pipe, 15mm Ferrule 4 No.

For 17 to 20 flats 20mm pipe, 15mm Ferrule 5 No.

For 21 to 40 flats 20mm pipe, 15mm Ferrule 6 No.

For 41 to 70 flats 20mm pipe, 15mm Ferrule 7 No.

Above 70 flats 20mm pipe, 15mm Ferrule 8 No.

In respect of water connections to temple, mosque and churches, the water must be used for drinking only. If the water is used for other then drinking purpose, water charges will be collected commercial rate.

Subject to the above bye-laws, the Engineer or his authorized official will determine the measurement of the Valves Ferrule Taps to be fixed in the water connections and also the length of the pipes. This will depend u flow of water in the main pipe line and the force and water pressure. Such measurement and other fixtures according to the following proportions:-

i) 15mm pipe connection 10mm Ferrules (Upto 30 metre length)

ii) 20mm pipe connection 15mm Ferrules (Upto 90 metre length)

In case any other measurement is found necessary only after getting the permission of the Chief Engineer Office of the Commissioner of Municipal Administration, the connections will be given. The flow control valves pipes to be used in all cases should be tested and bear ISI Certificate or should have been approved Chief Engineer Office of the Commissioner of Municipal Administration. At any rate, such a measurement should not exceed 15 mm. Such materials used by the Consumer for water connections should be as specified Engineer and in conformity with the standards of ISI.

## 8. Revised Charges for the provision of Drinking water Supply:

a) Drinking water for Domestic use - Rs. 130.00 per month

Commercial Use - Rs. 255.00 per month

b) Industrial Use - Rs. 305.00 per month

c) Revised deposits for the provision of drinking water supply :-

i) For each house connection for domestic purpose - Rs. 5000/-

ii) For each connections for non-demostic, Commercial and Industrial Purpose – Rs. 10000/-

d) Deposit amount for only House service connection Rs.5000/- can be paid in four installments. 1st installment amount should be paid when the water supply connection application submitted to this office. Balance amount canbe paid in three

equal installments with in a period of one year form the date of submission of application.

e) House Service connection Road Cutting charges and supervision charges total amount can be also paid in four installments. 1st installment should be paid when the application submitted to this office. Other 3 installments can be paid within one year from the date of submission of application.

For the existing water supply connections the difference of deposits should be paid in two equal installments with in a period of 6 months.

For the bulk water supply connections the charges will be collected in commercial rate.

9.1 The pipes and other connections of House Service Connection should be fitted in such a way so as the Corporation Officials or their designated staff to have convenient inspection of the same at all times. The house or occupier should provide all facilities for the inspections. If any hurdles are made, it will lead to disconnection house connection for the reason of non inspectablility

9.2 The tap should be fixed in such a way that it is not submerged in water and the entire system must be in such a way that the spill over water or the wastage of water from the water pipe joins the underground channel or the sewage pipe provided by the Municipality.i

10.1 The Metres installed in a house connection should have been duly approved by the Municipality and should be provided by the owners or the tenants of the house. The metres should always be locked of the Municipal Officers or their authorized officials. The meter readings will be taken every month.

10.2 The meters will be fitted either by the owner or the tenant at their own cost, and maintenance Rs. 2 will collected every month.

10.3 If the meters fixed by the owner of the house or the tenant becomes defective then such owner or tenant will arrange for the repair of the meters at his own cost, after getting permission. The repair work shall be done within a period two months under the Supervision of the Municipal Engineer after getting necessary permission from the Commissioner. The meter after repair should be handed over to the Engineer in charger of the unit Office. Such meters Should be Functional to the Satisfaction of the Unit Engineer and only there after the meters should be fixed up again, Non-compliance will the above condition will entail disconnection of the water supply

11. During the period of meter repairs, charges for the supply of water to the house connection will be collected as prescribed under bye-law No. 16

12. If the new House Service Connections are a distance of more than 90 meter from the main pipe connections will be given only on specific permission by the Chief Engineer o/o The Commissioner of Municipal Administration. The nature and measurement of the pipes and the materials used will be approved by the Chief Engineer.

13.1 The water consumption charges as per meter reading should be remitted into the Municipal Treasury within 15 days from the date receipt of demand notice. The demand sent before 10th of every quarter will be for the water consumption of previous quarter.

13.2 If the water charges are not remitted within the time prescribed under the bye-law abovementioned, the Commissioner of the Municipality is empowered to disconnect the water supply at any time. The Commissioner will not be liable for any loss or damage on account of such disconnection of water supply, the tenant or the owner of the house alone is responsible.

13.3 If the charges drinking water supply are not remitted within the period prescribed under the bye-law above mentioned the same will collected in the manner provided under the rules for the collection of property tax

13.4 In each charges case disconnection of water supply, due to non-payment of water charges, a sum of Rs. 200 towards disconnection and another sum of Rs. 200 for reconnection of water supply (totally Rs. 400/-) will be collected along with the water consumption charges or the same should be remitted separately to the Municipality.

13.5 In case of failure to get reconnection of water supply within a period of one year from the date of disconnection, the water connection will be construed as permanently disconnected.

14. If for any portion of the quarter of the year, the water is not utilized, there will not be any proportionate remission of water charges. If for the entire period of the quarter of the year water is not used, the Commissioner has powers for remission of the charges, but the Commissioner must be duly informed about the non-use of the water in advance, by a written communication and the water supply disconnected temporarily. In such a case a sum of Rs. 200/- for disconnected and another sum of Rs. 200/- for reconnection will be collected every time.

> **Note:** The quarter of the year referred to in above bye-laws means 3 months or 90 days.

15.1 If the matter shows reading or the meter itself becomes defective the consumer should inform the authorities in writing full details of the defects and a sum Rs. 250/- should be deposited within a period of 4 weeks or 30 days from th date of noting the reading in the meter.

15.2 Complaints received beyond the above prescribed period of time or without accompanying by deposit will not be considered

15.3 If during inspection it was found out tat is difference in the readings due to the defect in meter, the deposit amount already collected will be refunded. If it was found out that meter was showing correct reading or the meter was not defective the deposit amount will be forfeited.

16 If the meter fitted to the house connection showed defective reading or the meter was found defective for more than a week then in such a case the meter reading

recorded during the corresponding month of the previous year will be taken into consideration for assessing the charges of water connection for the period in question. If such particulars could not be ascertainable the Commissioner can determine the quantum of water on the basis of statistic gathered and considered fit and the charges will be assessed and collected, based on the above quantum. The decision of the Commissioner will be final.

17 No mechanical device or hand pump or electrical motor shall be permitted to be fitted in the house connection pipe for lifting water. If such a device was found the water connection will be disconnected without any notice.

18. The pipe carrying water to the house connection should not be directly linked to the water pit or the storage tank. This will not apply in the case of connection under bye-laws 23 and 24.

19. The owner of the house or its tenant having the water connection to the house should maintain the same in perfect good condition. Any defect in the system should be rectified at the cost of the owner or tenant in the presence of Municipal Officials. Centage charges shall be paid based on the amount of the estimate for the repairs.

20 The Commissioner (or) the persons authorized by Commissioner is empowered to remove the water pipe or other connections to the house connection for examining the condition of the connection. If the pipes or other connection are found to be defective, the Commissioner will give a notices of one month's time for rectifying the defect, or putting new pipes in the place of defectives ones. If the defect is not rectified within the time granted by the Commissioner or if it comes to the notice of the Commissioner, that there will be wastage of drinking water or the purity of the water is likely to be spoiled, the Commissioner can get the defect rectified through the Municipal officials and recover the coast from the owner of the house or tenant or the Commissioner can cause stoppage of water to the house connection, after disconnection of the water supply.

21. The water supplied from the tap connection for domestic use should not be used for any other purpose without the written prior permission of the Commissioner. If such use by the owner of the house or the tenant comes to the knowledge of the Commissioner or the Commissioner has reason to believe in the existence of such use he can ask the person concerned to pay the charges under bye-laws No. 12 for use the water other than domestic purpose as per the particulars gathered by him from a particular date, and if the owner of house or tenant fails pay the said charges, the Commissioner can order the disconnection of the water supply.

22(1). Taking water by means of a mechanical device through a pipe or through any electrical motor from the mains is prohibited. If such a device is found out the house connection will not only be disconnected but also the electrical motor or other mechanical device will be confiscated and such articles will not be returned on any account. Reconnection will be given only on payment of Rs. 7000/- as fine, along with an undertaking that such devices will not be fitted in future. Apart from the owner or occupier of the house should also pay additional fine amount equivalent to six/half yearly (3 years) total water charges.

22(2). Repetition of use of such mechanical or electrical device, for pumping out water will entail permanent disconnection of the water supply connection. Action will also be taken in a Court of Law.

23. All the applicants requesting drinking water supply connection should make arrangements for the harvest of rain water and also apply for underground drainage connection by remitting the necessary deposits amounts and other amounts for linking the flow of wastage water to underground drainage channel. In case underground drainage system is not implemented in these parts of the area, the waste water to be collected in a chess pool to the satisfaction of the Commissioner. If any water connection is requested from the drinking water pipe for the public convenience, toilets and urinals, a separate storage pit with necessary implements must be installed in the place fixed by the Municipal Engineer.

24. No direct connection from the main distribution pipe line of Municipality will be granted for the boilers. Water be taken only from the storage tank specially constructed for the purpose. For every such constructed tank there shall ball (float) tap, watch/alarm device and should be put in such a way as to facilitate easy inspection by the Municipal Officials.

25. Except during the time of fire accident, persons without any permission from the Commissioner/ Engineer are prohibited to operating the main pipe line or the ferrules at the water distribution point and the fire hydrant.

26. Under orders from the Municipal Commissioner temporary water connection can be given to the buildings for marriage and other functions. For such extensions of water supply a sum of Rs. 100/- per day or a portion of a day will be collected. In addition to that Rs. 250/- will be colleted for connection from the main pipe line. Another Rs. 250/- will be collected for disconnection of the supply, such an extension will have a 15 mm main pipe two meters length. Such water connection will be temporary and for these temporary extensions the applicant should provide the necessary materials and other implements at their own cost. If additional pipes are required a sum of Rs.50/- for a day or part there of for every additional pipe fitting will collected. Such temporary connection shall not exceed 5 days at a given time.

27.1. Tampering with the seal over the meter or break open the lock put on the meter or tampering with the glass fixed on the meter or open or alter the note in the meter or interfere in any way with the recording of the quantity of water used from the meter are all prohibited.

27.2. The Practice of taking water from the supply connection prior to the fixation of meter should be avoided.

27.3. Any interference with a view to prevent the functioning of meter reading by causing damage to the meter or removing it form the spot by theft will not be permitted. The consumer should not be a cause for such incidences.

28.1 These by – laws will be applicable to all the existing water connections also. If the tenant or the owner of the house undertakes to per all the charges payable to the Municipality, such connections will be declared as legally recognized, under the new

scheme. if such charges are not paid such existing connection will be declared as unrecognized connection and water connection will be permanently disconnected.

28.2 The rules and regulations which were followed for the water connectiuons will cease to the operative from the date when the amended bye – laws come into force.

28.3 Those who want to have new water supply connection should pay all the taxes and other non – tax dues till the close of the current financial year and enclose the copy of the receipts, along with the application. They only the application will be taken up for consideration.

29. If there is any deficiency of water in storage point of the distribution of water of if that it comes to the notice of the Municipal authorities drinking water intended for domestic or mom – domestic purposes has been put to wrong use or if such water supply connection were deliberately damaged then the Municipal Commissioner has a right to disconnect the supply on 24 hours notice. The Municipal Council or the Commissioner will not in any way be responsible for the loss inconvenience caused in the connections.

30. The above bye- laws will also apply to the water supply connection to the establishments controlled and administered by the Government on the basis of the recommendation of the Chief Engineer, Office of the Commissioner of Municipal Administration.

31. Who ever violates the above bye – laws or cause damage will be liable for punishment as shown below:-

1) A sum of Rs.500/- will be fined with a warning notice to stop further violation or damage; if in spite of such a warning notice such an act continues to be done then a daily recurring fine of Rs.25/- willimposed. If the crime is continued, water connection will be disconnected and necessary action will be taken throught court of Law.

32. The applicant who requires house connection should get the Form A at free of cost.

**Penalty:**

Violation of any bye – law above mentioned by any person or by a child under 7 years, under the custody of a person and such person having control over the child, will be liale to apenalty upto Rs.1000 and if the violation is a continuous affair, the penalty of Rs.100/- for each day will be inflicted and collected.

**BYE – LAWS FOR PUBLIC DRINKING WATER TAPS**

1. No member of the public will allow wastage of drinking water from the public drinking pipe connection of the fire hydrant, deliberately or by negligence by act.

2. i)No member of the public will be allowed to take drinking water in a container capable of holding a quantity exceeding 30 liters.

ii) Water must be taken only for domestic purposes and for no other purpose.

iii) No member of the public will be allowed to take bath, wash clothes, clean carts, bath animals in public tap or storage pit intended for the use of cattle.

i) When others are waiting in queue, one person cannot take water form the public tap more that once continuously.

3. During the time of fire accident only, water can be taken form the bydrant for putting out fire and water should not be taken form fire hydrant for other purposes.

4. Water can be taken form the public tap or form the fire hydrant only during the dire accident and for no other purpose such water can be utilized. If water form the public tap or fire hydrant is continuously taken for selfish purpose the person will be subjected to legal action under the provisions of the Municipal Act and the rules made therein.

5. No person having contagious or loathsome disease will be permitted to use public tap or fire hydrant.

6. Animals having loathsome disease or havin disese which easily spreads or any other contagious disease should not be taken near the public tap or fire hydrant.

7. No person can cause nuisance arount the area or public tap or fire hydrant. Such lapses if found out will be booked under the Municipal Act and legal action will be taken.

8. Except during fire accident, no person will be permitted to take water form the mainsupply pipe line or distributions on form the fire hydrant source of from the public tap connected to the Municipal water supply scheme or cause any damage to the same, except the persons permitted by the Commissioner.

9. Arount the public tap no pot or other containers shall be placed in ques. It is alos prohibited to waste the water by washing the pots.

Commissioner(i/c)
Idappadi Municipality